பதவிய பிரதேச சபை - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புதவிய பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வறிக்கையின் 1.6 ஆம் இலக்க பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர்த்து, இவ்வறிக்கையானது 2020 திசெம்பர் 31 ல் பிரதேச சபையின நிதி நிலைமை மற்றும் குறித்த திகதியுடன் முடிவடையும் அவ்வருடத்துக்கான நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் தொடர்பில் உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்தஅறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்புக்கள், கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்தினை உறுதிப்படுத்த கணக்காய்வின் போது நான் பெற்றுக்கொண்ட ஆதாரங்கள் போதுமானது, பொருத்தமானது என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் அதனோடு தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் சம்பந்தமான வகை கூறல் ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு சாத்தியமயன வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வுவிடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற தவறான விளக்கங்கள் அற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும்

எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும் ,இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் உண்மைகளை மாத்திரமே வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதம் காணப்படுவதில்லை. மோசடிகள் மற்றும் தவறுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பிழைகள் ஏற்படக் கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்களினைப் பொறுத்து அதன் தாக்கம் தங்கியிருக்கின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் இக் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடனேயே செயற்பட்டேன். மேலும் என்னால்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களைவிட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதற்கு தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் என்பன காரணமாகின்றன.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் தொடர்பில் கருத்துக்களை வெளிப்படுத்தும் நோக்கம் இல்லாத போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதா எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கென கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்டவிதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) வட மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்கப்பட்ட 2019/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் புதிய கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(இ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(இ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபையின் பெறுமானத்தேய்வு கணக்கிடும் கொள்கையின் பிரகாரம் குறித்த காலப்பகுதிக்கென வழங்கப்பட்டிருந்த பெறுமானத் தேய்வு வீதத்துடன் பெறுமானத் தேய்வுப் பெறுமதி பொருந்தாமை காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வுத் தொகையாகக் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 2,256,164 சரியானது என ஏற்றுக்கொள்ள முடியவில்லை. | குறைந்து செல்லும் மீதிகளுக்கு ஏற்ப பெறுமானத் தேய்வு கணக்கிடப்பட்டுள்ளது. | முன்வைக்கப்பட்ட பயனுள்ள வாழ்க்கை காலத்தின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு கணக்கிடப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வுஅவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் மூலம் பெறப்பட்ட வருமானமானது வருமானப் பதிவேட்டில் ரூபா 18,000 குறைவாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | ஆண்டுக்கான சரியான வருமானத்தை பதிவு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் புதிய நீர் வழங்கல் இணைப்பு களுக்கான வருமானத்திற்கு மேலதிகமாக ரூபா 27,000 நிதிக்கூற்றுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர் செலுத்திய தொகையானது குறித்த ஆண்டிற்கான வருமானமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | ஆண்டுக்கான சரியான வருமானத்தை பதிவு செய்தல் வேண்டும். |
| (உ) | சபையின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பாதைகளினூடே மண் (கிரவல்) கொண்டு செல்ல அனுமதிக்கப் பட்டிருந்த ஒரு சங்கத்தினூடாக தலா ரூபா 5,000 வீதம் 17 திட்டங்களுக்கான பாதைப் பயன்பாட்டுக்கென அறவிட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 85,000 ஆனது நிதிக்கூற்றுகளில் அறவிடப்படவேண்டிய வருமானமாக இணங் கானப்பட்டிருக்கவில்லை. | இந்த 22 வேலைத்திட்டங்கள் பதவிய பிரதேச சபையினால் உரிய சங்கத்துடன் இணைந்த அடிப்படையில் ஒப்பந்தம் மேற் கொண்டு நடைமுறைப் படுத்தியமையினால் வீதிப் பயன்பாட்டிற்கான கட்டணங்கள் அறவிடப்படவில்லை. | வீதிப் பயன்பாட்டிற்கான கட்டணங்கள் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை மிஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,184,818 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 825,563 ஆக இருந்தது.

## 03. செயற்பாட்டின் மீளாய்வு

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை ஒழுங்கு படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் மக்களின் நலன், வசதி மற்றும் பொது நலனுக்காக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளின் செயலாற்றல் குறித்து மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் பின்வருமாறு.

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வுஅவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆகஸ்ட் 16 ஆம் திகதியன்று கழிவுப் பொறுப்பு மீள் சுழற்சி திட்டத்தில் பயன் படுத்தப்படும் இயந்திரத்தில் தீயினால் ஏற்பட்ட ரூபா 800,000 நட்டத்தினை அறவீடு செய்வதற்குறிய நபர்களை அடையாளம் காண்பதற்கான செயற் பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக முதற்கட்ட விசாரணைகளை மேற்கொள்ள உள்ளூராட்சி ஆணையாளரினால் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். | எந்த அறிக்கையும் வழங்கப்படவில்லை. இந்த நட்டம் ஏற்படக் காரணமான தரப்பினரை கண்டறிந்து அந்த நட்டத்தினை அறவீடு செய்ய வேண்டும் |